
# உலகம் முழுவதையும் ஆதாயப் படுத்திக்கொண்டாலும்




**மத்தேயு 16:26** வசனங்களில் **"மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?"** என்று கூறப்பட்டுள்ளது.

மேற்க்கண்ட இந்த வாக்கியத்தை, ஆண்டவர் ஒருவன் தன்னைப் பின்பற்றி வரவிரும்பினால் என்ன செய்ய வேண்டும் என்று கூறும்பொழுது இவ்வாறாக கூறினார். உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்துவது என்பது ஒருவன் இவ்வுலகில் தான் செய்ய நினைத்ததை, அடைய நினைத்ததை, சாதிக்க நினைத்ததை, செய்து முடித்துவிட்ட நிறைவை பெற்றுக்கொள்வதாகும். உதாரணமாக, ஒருவன் தன் திறமையினால் தான் அடைய நினைத்த புகழின் உச்சியை அடைந்து விட்ட அனுபவமாகும். இப்படிப்பட்ட அனுபவத்தை பெற்று வாழும் மக்கள், இவ்வுலகில் அநேகர் உள்ளனர்.

எண்ணிமுடியாத செல்வத்தை சேர்த்த செல்வந்தர்கள், அரிய பெரிய காரியங்களை கண்டறிந்த மாமேதைகள், பெரும் அரசியல் அதிகாரங்களை பெற்று கோடிக்கணக்கான ஜனங்கள் உள்ள தேசத்தை ஆட்சி செய்பவர்கள், கலை, விளையாட்டு போன்ற துறைகளில் பெரும் சாதனை படைத்தவர்கள் போன்றோர் உலகம் முழுவதையும் தாங்கள் ஆதாயப்படுத்தி (ஜெயித்து) விட்டதாக கருதுகின்றனர். இப்படி அவர்கள்

தங்கள் வாழ்வில் பெறுகிற உயர்வு பாவமல்ல. ஆனால் அதனால் உண்டாகிற சில விளைவுகள் மனிதர்களை பாதை மாற செய்கிறது.

என்னதான் தாங்கள் தங்கள் வாழ்வில் சாதித்திருந்தாலும், அவையாவும் இவ்வுலக வாழ்விற்கு மாத்திரமே பிரயோஜனப்படுமே தவிர, மறு உலக வாழ்விற்கு அதனால் ஒரு பிரயோஜனமுமில்லை என்பதை பலர் உணர்வதில்லை. இன்னும் சிலர், இயற்கைக்கு மேலான ஒரு வல்லமை உண்டென்பதை உணராமல், தங்கள் சுயபெலத்தால், சாதுரியத்தால் எல்லாவற்றையும் சாதிக்க முடியும் என்று சுயசார்ப்பு நிலையை அடைகின்றனர். இதனால் மறுவாழ்வை (நித்திய ஜீவன்) குறித்து கவலைப்படாமல், தாங்கள் செய்ய நினைக்கிறதை, சாதிக்க நினைக்கிறதை அடைய இரவும், பகலும் பிரயாசபடுகின்றனர்.

இன்னும் சிலர், தாங்கள் எல்லாவற்றையும் அடைந்து விட்டதாகவும், இனி தங்களுக்கு மிஞ்சி எதுவும் இல்லை என்றும் நினைக்கின்றனர். இது அவர்களை சுயநீதியை சார செய்கிறது, இதில் சிக்குண்ட சிலர் நானே கடவுள் என்று கூறி அநேக மக்களை வஞ்சித்ததை நாம் உலக வரலாற்றில் கண்டுள்ளோம். இவ்வாறாக ஒருவன் தன் சரீர பிரகாரமான வாழ்க்கைக்காக எல்லாவற்றையும் ஆதாயப்படுத்தி கொண்டாலும், தன் ஆவிக்குரிய வாழ்க்கைக்குரிய ஜீவனை (நித்திய ஜீவன்) பெறாமல் இழந்து போவானானால் அவனுக்கு ஒரு லாபமுமில்லை (ஆதாயமுமில்லை) என்று ஆண்டவர் கூறிகிறார் (மத் 16:26).

ஏனெனில் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தை மனுஷன் கொடுப்பான்? என்று ஆண்டவரே அதற்கான பதிலையும் கொடுக்கிறார். ஆம் இதுவே வாழ்வின் எதார்த்தம். இவ்வுலகில் எல்லாவற்றையும் பெற்றும், ஜீவனை (நித்திய ஜீவன்) இழந்துபோனால், ஐசுவரியவான்-லாசரு சம்பவத்தில் காணப்படுவதை போல, பரிதபிக்கதக்க நிலையே ஏற்படும் (லூக் 16:19-31). சற்று யோசித்து பாருங்கள், பேரோடும் புகழோடும் கோடிக்கணக்கான மக்கள் மத்தியில் அதிகாரத்தோடு வாழும் ஒருவன், மறு வாழ்வில் தனிமையில் கொடிய வேதனைப்படுவது எவ்வளவு பரிதாபத்திற்குரிய வாழ்வாகும்.

அப்படியானால், வாழ்க்கையில் உயர்வை அடைவது அல்லது அதற்காக பிரயாசப்படுவது தவறா, இல்லை. மேற்கூறியபடி உயர்வை அடைவது தவறில்லை. அதன் மத்தியில் ஒருவருடைய மனநிலை, வாழ்க்கை நிலை எப்படி இருக்கிறது என்பதே முக்கியமாகும். உதாரணமாக, ஆபிரகாம், யோபு ஆகியோரின் இவ்வுலக வாழ்க்கை

**நிலை நிறைவுள்ளதாய் காணப்பட்டது. ஆனால் அவர்கள் அதனோடு திருப்தியடைந்து நின்றுவிடவில்லை.**

எபி 11:8-10 **கூறுகிறது** "விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான். விசுவாசத்தினாலே அவன் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திலே பரதேசியைப்போலச் சஞ்சரித்து, அந்த வாக்குத்தத்தத்திற்கு உடன் சுதந்தரராகிய ஈசாக்கோடும் யாக்கோபோடும் கூடாரங்களிலே குடியிருந்தான்; ஏனெனில், தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு அவன் காத்திருந்தான்."

**மேலும்** எபி 11:15,16 **வசனங்களில்** "தாங்கள் விட்டுவந்த தேசத்தை நினைத்தார்களானால், அதற்குத் திரும்பிப்போவதற்கு அவர்களுக்குச் சமயங்கிடைத்திருக்குமே. அதையல்ல, அதிலும் மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள்; ஆகையால் தேவன் அவர்களுடைய தேவனென்னப்பட வெட்கப்படுகிறதில்லை; அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம்பண்ணினாரே." **இங்கு நாம் காண்கிறபடி, இவ்வுலக ஆஸ்தியும், சவுக்கியமும் உண்டாயிருந்தாலும் ஆபிரகாமுடைய நோக்கம் எல்லாம் பரம தேசத்தை குறித்தே காணப்பட்டது. இவ்வாறாக பரலோக வாழ்வை குறித்த ஒரு விருப்பத்தோடு இருப்பவர்களுக்கு, நிச்சயமாகவே நித்திய வாழ்வை தேவன் தந்தருளுவார்.**

**மேலும்** பிலி 3:9-11 **வசனங்களில்** "நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும், இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும், அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்." **என்று கூறியிருக்கிறபடி, அப். பவுல் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு உயிர்தெழுதலில் பங்கடைய (நித்திய ஜீவனை பெற) அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டு, குப்பையுமாக எண்ணுகிறார்.**

**இப்படிப்பட்ட மனநிலையே நம் ஒவ்வொருவரிலும் காணப்படவேண்டும். அப்பொழுது மட்டுமே நம் வாழ்வு நிறைவுள்ளதாய் காணப்படும். தேவன் தாமே இப்படிப்பட்ட வாழ்க்கையை நம் ஒவ்வொருவருக்கும் அருள்வாராக. ஆமென், அல்லேலூயா.**